[1973 நவம்பர் 20

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இது பௌல்ட்ரி டெவலப்-மெண்ட் பற்றியது. கோழி இல்லாத இடங்களில் கோழிப் பண்ணை வைப்பது என்பதுபற்றி அல்ல. தரமான கோழிக் குஞ்சுகளைத் தயாரித்து, கோழி வளர்க்க விரும்புகிறவர்களுக்குக் கொடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட நிறுவனம் இது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 231.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : It is a very important question. As egg is selling at 42 P., people are suffering a lot. When such an important question is answered, members should be given an opportunity to put supplementaries. We are raising our hands, but we are not able to catch the eye of the Hon. Speaker. We feel really sorry for it.

Levy of Pilgrim tax in Thiruvarangam.

*231 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Local Administration, be pleased to state whether this Government have recommended to the Centre to permit the Srirangam Municipality to levy pilgrim tax throughout the year during 1972?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

தொழில் வரி வசூல்

*232 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழில் வரியை வேலை செய்யும் ஊழியர்களின் சம்பளத்திலேயே பிடித்துக் கொள்வது பற்றி அரசு ஆலோசித்து வருகின்றதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : அமைச்சர் அவர்கள் ஆம் என்று பதில் அளித்தார்கள். எந்த வகையிலே செயல்படுத்த இருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?